**இலங்கை றக்பி நிறுவனம் - 2024**

**-----------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை றக்பி நிறுவனத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் 1993 இன் 47 ஆம் இலக்க விளையாட்டுக்கள் (திருத்திய) சட்டத்தின் பிரிவு 9 ஆல் திருத்தியமைக்கப்பட்ட 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் பிரிவு 21 அ வின் ஏற்பாடுகள் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, இலங்கை ரக்பி நிறுவனத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க (எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எ.ஃ.ப்ஆர்எஸ்) உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் கணக்காய்வு விடயப்பரப்பு பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, இலங்கை றக்பி நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது இலங்கை றக்பியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

இலங்கை றக்பி நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இலங்கை றக்பி நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.
துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக இலங்கை றக்பி நிறுவனத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி இலங்கை றக்பி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக இலங்கை றக்பி நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும்.

எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது இலங்கை றக்பி நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது இலங்கை றக்பி நிறுவனத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க இலங்கை றக்பி நிறுவனம் செயற்படுகின்றதாஎனவும்,

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்,

**1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை (எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எ.்.ப்ஆர்எஸ்)**

| உரிய நியமங்களுக்கான குறிப்புக்களுடன் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பந்தி 17.19 இன் பிரகாரம், ஓர் சொத்தின் இழிவுப்பெறுமதி அல்லது பயன்தரு ஆயுட்காலமானது ஒவ்வொரு அறிக்கை திகதியிலும் கனிசமாக மாறியிருந்தால், இது வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டு அதன்படி தேவையான சீராக்கங்கள் கணக்குகளில் செய்யப்படல் வேண்டும். இருப்பினும், இலங்கை றக்பியானது ரூபா 1,867,949 தொகையான முழுமையாக தேய்விடப்பட்ட சொத்துக்களுடன் தொடர்புபட்டு அந் நடவடிக்கையினை எடுத்திருக்கவில்லை. | இது 2025 இல் சீராக்கம் செய்யப்படும். | நிறுவனமானது எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எ.்.ப்ஆர்எஸ் உடன் இணங்க வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது இலங்கை கிரிக்கட் இனால் இலங்கை றக்பியிற்கு வழங்கப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 8,775,000 ஆனது நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்படவில்லை. அதன் பெறுபேறாக, நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட வருமானமானது அத்தொகையினால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. | 2025 இல் நடவடிக்கை எடுக்கப்படும். | அனைத்து மானியங்களும் நிதிக்கூற்றுக்களில் சரியாக வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

### 1.5.3 நிறுவனத்தின் தொடர்ந்து இயங்கும் தன்மை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை றக்பியின் மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள் அதன் மொத்த நடைமுறைச் சொத்துக்களை ரூபா 28,203,944 ஆல் விஞ்சியுள்ளதுடன், மீளாய்வு ஆண்டின் இறுதியில் உள்ளவாறு மொத்தப் பொறுப்புக்கள் அதன் மொத்தச் சொத்துக்களை ரூபா 27,495,339 இனால் விஞ்சியுள்ளன. மேலும், திரண்ட நிதியத்தின் எதிர்மறை மீதி மொத்தச் சொத்துக்களில் 1.6 தடவைகளாக இருந்தது. இந் நிலைமையானது இலங்கை றக்பியின் தொடர்ந்து இயங்கும் தன்மைக்கு ஓர் நிச்சயமற்ற தன்மையை உருவாக்கியிருந்தும், நிதிக் கூற்றுக்களில் அது வெளிப்படுத்தப்படவில்லை. | இதற்கான காரணம் அக்காலப்பகுதியிலான கொரோனா தொற்று மற்றும் நிறைவேற்று குழுவின் பற்றாக்குறை என்பனவாகும். இருப்பினும் தற்போது ஓர் நிறைவேற்று குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் இந்நிலமையினை சரிசெய்ய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது. | சம்மேளனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மையானது உறுதிசெய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

## 1.6 பெற வேண்டியவை மற்றும் செலுத்த வேண்டியவை

### 1.6.1 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த செலுத்தவேண்டிய மிகுதியான ரூபா 39,561,761 இல், கூட்டுமொத்தம் ரூபா 33,137,047 ஆனது 05 வருடங்களிற்கு மேலாக தீர்ப்பனவு செய்யப்படாமல் காணப்பட்டது. | இது எதிர்காலத்தில் திருத்தப்படும். | நிலுவைத் தொகையை கொடுத்து தீர்க்க உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 முற்பணங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 08 மாகாண சங்கங்களிற்கு வழங்கப்பட்ட மொத்த முற்பணங்கள் ரூபா 4,854,036 ஆனது இவ்வறிக்கை திகதியில் உள்ளவாறு கூட தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. இதில், ரூபா 1,266,258 ஆனது 05 வருடங்களிற்கு மேலாக தீர்ப்பனவு செய்யப்படாமல் காணப்பட்டது. | இது எதிர்காலத்தில் திருத்தப்படும். | முற்பணங்களை தீர்ப்பனவு செய்ய உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச்சட்டத்தின் பிரிவு 16 மற்றும் 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிய சட்டத்தின் பிரிவு 16 (1) | ஊழியர் சேமலாப நிதிப் பங்களிப்புக்களானது அடுத்த மாதத்தின் இறுதி நாளிற்கு முன்னர் செலுத்தப்படல் வேண்டும். இருப்பினும், 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டிற்கான பங்களிப்புக்கள் முறையே ரூபா 380,501 , ரூபா 345,400 மற்றும் ரூபா 305,400 ஆனது இவ்வறிக்கை திகதியில் உள்ளவாறு கூட செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், இலங்கை றக்பியானது ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்பினையும் உரிய திகதியில் செலுத்தியிருக்கவில்லை. அதன் பெறுபேறாக, மீளாய்வாண்டின் போது ரூபா 61,860 தொகையான தண்டப்பணம் விதிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் இவ்வாறான நிலமைகளை தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். | சட்ட ஏற்பாடுகளுடன் இணங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2024 மே 03 ஆம் திகதிய 2382/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2024 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விளையாட்டுகளிற்கான தேசிய சங்கங்களின் ஒழுங்குவிதியின் பகுதி III | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | (i) பிரிவு 6(i) | நாட்டின் ஒவ்வொரு மாகாணத்திலும் றக்பி விளையாட்டின் அபிவிருத்தி மற்றும் மேம்படுத்தலினை மதிப்பீடு செய்வதற்கான ஓர் செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இவ் அறிக்கை எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படும். | விளையாட்டுத்துறை ஒழுங்கு விதிகள் பின்பற்றப்படல் வேண்டும். |
| | (ii) பிரிவு 6(xii) | மீளாய்வாண்டிற்கான ஓர் செயற்பாட்டுத் திட்டம் இலங்கை றக்பியினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இவ் அறிக்கை எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படும். | விளையாட்டுத்துறை ஒழுங்கு விதிகள் பின்பற்றப்படல் வேண்டும். |
| (இ) | விளையாட்டு பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட 2021 திசெம்பர் 15 ஆம் திகதிய தேசிய விளையாட்டுச் சங்கங்கள் / சம்மேளனங்கள் இன் செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட வழிகாட்டிகள். | | | |
| | (i) பிரிவு 3(iii) | விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து தேவையான அனுமதியினை பெற்றுக் கொள்ளாமல் இலங்கை ரக்பி நான்கு (04) வங்கிக் கணக்குகளை பேணி வந்துள்ளது. | நிறைவேற்றுக் குழுவின் அனுமதியுடன் 2025 இல் உரிய கணக்குகள் முடிவுறுத்தப்படும். | வழிகாட்டிகளின் ஏற்பாடுகள் பின்பற்றப்படல் வேண்டும். |
| | (ii) பிரிவு 3(xiv) | 2024 டிசம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறு முறையே ரூபா 9,699,681 மற்றும் ரூபா 700,981 பெறுமதியான நிலையான சொத்துக்கள் மற்றும் இருப்புக்களிற்கான கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படவில்லை. | இது 2025 இல் செய்யப்படும். | வழிகாட்டிகளின் ஏற்பாடுகள் பின்பற்றப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 12,869,960 மிகையாகவும், அதற்கு முந்தைய ஆண்டில் இதற்கு நேரோத்த பற்றாக்குறை ரூபா 4,456,249 ஆகவும் இருந்தது. இதனால், நிதி பெறுபேறுகளில் ரூபா 17,326,209 பெறுமதியான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் உலக றக்பி மானியம் ரூபா 28,374,202 ஆல் அதிகரித்திருந்தமையே இம் முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாகும்.

## 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, மீளாய்வாண்டின் வருமானம் மற்றும் செலவினங்களின் முக்கிய உருப்படிகளின் பகுப்பாய்வு அதிகரிப்பு அல்லது குறைவடைதல் சதவீதத்துடன் பின்வருமாறுள்ளது.

| விபரம் | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறுமதி ரூபா | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறுமதி ரூபா | வித்தியாசங்கள் | |
|---|---|---|---|---|
| | | | சாதகம் / (பாதகம்) ரூபா | சதவீதம் % |
| **வருமானம்** | | | | |
| புலமைப்பரிசில் | 38,223,722 | 33,186,014 | 5,037,708 | 15 |
| உலக றக்பி மானியம் | 30,822,013 | 2,447,811 | 28,374,202 | 1159 |
| ஏனைய வருமானம் | 1,410,456 | 808,747 | 601,709 | 74 |
| வெளிநாட்டு நணயமாற்று இலாபம் | 920,435 | 726,543 | 193,892 | 27 |
| **செலவு** | | | | |
| றக்பி செயற்பாட்டு செலவுகள் | 45,265,125 | 29,966,627 | (15,298,498) | 51 |
| நிர்வாகச் செலவுகள் | 13,232,681 | 11,528,260 | (1,704,421) | 15 |
| ஏனைய செயற்பாட்டு செலவுகள் | 8,860 | 130,477 | 121,617 | 93 |

இதனுடன் தொடர்புபட்டு பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டது.
முன்னய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான மொத்த வருமானம் ரூபா 34,207,511 ஆல் அதிகரித்திருந்ததுடன் செலவு ரூபா 16,881,302 ஆல் அதிகரித்துமிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை றக்பி ஆனது உலக றக்பியினால் காலத்திற்கு காலம் வெளியிடப்படும் விதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் இணங்கவேண்டியிருந்தும், இலங்கை றக்பி ஆனது அவைகளுடன் இணங்க தவறியிருந்தது. அதன் பெறுபேறாக, 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உலக றக்பியினால் கூட்டுமொத்தம் யூரோ 50,000 தண்டப்பணம் விதிக்கப்பட்டிருந்தது. அதில், ரூபா 5,255,621 பெறுமதியான யூரோ 40,000 ஆனது உலக றக்பியிற்கு செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், மேற்கூறப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் இணங்க தவறிய உரிய நபர்களிற்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | கருத்துரைகள் கிடைக்கப்பெறவில்லை. | இலங்கை றக்பியானது உலக றக்பியினால் வெளியிடப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் இணங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2024 மே 29 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி இல 2386/08 இல் வெளியிடப்பட்ட அறிவுறுத்தலின் பிரகாரம் இலங்கை றக்பியின் பதிவானது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது. அதன் பெறுபேறாக, 2024 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது நடாத்த பட்டியலிடப்பட்டிருந்த 24 உள்நாட்டு விளையாட்டு சுற்றுத்தொடர்கள் மற்றும் 04 சர்வதேச சுற்றுத்தொடர்கள் என்பனவற்றை திட்டமிட்ட படி நடாத்தமுடியாமல் போயிருந்தமை அவதானிக்கப்பட்டது. | உடன்பட்டனர். | எதிர்காலத்தில் இலங்கை றக்பியின் இடைநீக்கத்தினை தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |